# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, THIRUMANGALAM.

## O.S.No. 90/2018

## DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 01.05 PM.

<u>வா.சா. 1 சாட்சி ராணியம்மாள்   க.பெ.கந்தசாமி</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additioanl District Munsif on 21.11.2025 in accordance with the provisions of Act XX141.**

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு  விசாரணை</u> :

1. வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சொத்திற்காக தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு சொத்துக்கள் எத்தனை இலக்க சொத்துக்கள் என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் பழைய மற்றும் தற்போதைய சர்வே எண் மற்றும் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் நான்குமால் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ராமம்மாளுக்கு பாத்தியப்பட்டது. ராமம்மாளின் கணவர் பெயர் என்ன என்றால் சிவராஜ் பாண்டியன் ஆகும்.

2. ராமம்மாளுக்கு தாவா சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்றால் கிரைய பாத்தியம். எப்போது கிரையம் வாங்கியது என்றால் தெரியாது. ராமம்மாள் கணவருக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். மற்றொரு மனைவியான கோணம்மாளின் மகன்தான் சுப்புராஜ் என்றால் சரிதான். ராமம்மாளுக்கு கலாவதி, சரோஜா, பாண்டியன் என்ற 3 பிள்ளைகள் என்றால் சரிதான். மேற்படி 3 பிள்ளைகளும் எப்படி பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். பாகம் பிரித்துக்கொண்ட ஆவணங்கள் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

சரோஜாவிற்கு வழக்கு சொத்து எப்படி பாத்தியம் என்றால் பதிவில்லா கிரைய ஆவணமூலம் பாத்தியப்பட்டது.

3. சரோஜா எனக்கு எப்போது கிரையம் கொடுத்தார் என்றால் நினைவில்லை. நான் உரிய சட்டப்படியான வாரிசுகளிடமிருந்து கிரையம் வாங்கவில்லை என்பதால் எனது கிரையம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. திருப்பதி யார் என்றால் கலாவதியின் மகன் ஆவார். திருப்பதிக்கு எதிராக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு எதிராகத்தான் திருப்பதி வழக்கு தாக்கல் செய்தார்.

4. எனது வழக்குரையில் திருப்பதிக்கு எதிராக அ.வ.எண். 75/15 வழக்கை தாக்கல் செய்து அதில் எனக்கு ஆதரவாக தீர்ப்பு பெற்றுள்ளேன் என்று கூறியுள்ளேன் என்றால் தெரியாது. தாவா சொத்தின் மேல்புறத்தில் யார் உள்ளார்கள் என்றால் பரமசிவம் உள்ளார். மேற்படி பரமசிவம் எனது கொழுந்தனாவார் என்றால் சரிதான். அதற்கு மேல்புறம் விஜயராமன் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அதற்கு மேல்புறம் எனது நான்குமாலில் குறிப்பிடப்பட்டுள்ள விநாயகர் கோவில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு தென்புறம் பிரதிவாதி வீடு உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய பின்னர் இடத்தை அளந்தேனா என்றால் அளக்கவில்லை. அளக்க பணம் கட்டியும் அளக்கவில்லை. மேற்படி அளக்க பணம் கட்டியது சம்பந்தமான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் உள்ளது.

5. வழக்கு சொத்தானது ஆடு மாடு கட்டி எனது அனுபவத்தில் உள்ளதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வழக்கு சொத்து காலி இடமாகத்தான் உள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்திற்கு எனக்கு அனுபந்த பட்டா எனக்கு எப்போது வழங்கினார்கள் என்றால் நினைவில்லை. வழக்கு சொத்து சம்பந்தமாக உசிலம்பட்டி வருவாய்

கோட்டாட்சியரிடம் விசாரணை நடைபெற்றதா என்றால் நடைபெற்றது. மேற்படி வருவாய் கோட்டாட்டசியரிடம் மனுவை பிரதிவாதிதான் தாக்கல் செய்தார். மேற்படி பிரதிவாதியின் கணவர் பெயர் மணிகண்டன் ஆகும். பிரதிவாதியின் கணவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளோமா என்றால் சேர்க்கவில்லை. பிரதிவாதி ஆக்கிரமித்ததாக கூறும் இடத்தின் அளவுகள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் எப்போது எனது அனுபவத்தை இடைஞ்சல் செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ1 ஆவணத்தில் சர்வே எண். 245/1 பிளாட் எண்.8 என்று காணப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி பட்டா யார் கொடுத்தார்கள் என்றால் தாசில்தார் கொடுத்தார். எப்போது கொடுத்தார் என்றால் நினைவில்லை. வா.சா.ஆ.1 ல் உள்ள நான்குமால் விபரம் வழக்கு சொத்தில் உள்ள நான்குமாலும் வெவ்வேறானவை என்றால் தெரியாது. வா.சா.ஆ. 2 ஆவணத்தில் சர்வே எண். 245/1 ல் பிளாட் எண். 7 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வா.சா.ஆ.2 ல் உள்ள நான்குமால் விபரம் வழக்கு சொத்தில் உள்ள நான்குமாலும் வெவ்வேறானவை என்றால் தெரியாது. வா.சா.ஆ. 3 இரசீதுகள் யார் பெயரில் செலுத்தப்பட்டு வருகிறது என்றால் எனது பெயரில் செலுத்தப்பட்டு வருகிறது. மேற்படி இரசீதுகள் எந்த தேதிக்குரியது என்றால் தெரியாது. வா.சா.ஆ. 4 ஆவணம் தண்ணீர் கட்டண இரசீது எப்போது செலுத்தியது என்றால் தெரியாது.

7. வா.சா.ஆ. 5 ஆவணம் எந்த தேதியில் வழங்கப்பட்டது என்றால் தெரியாது. வா.சா.ஆ. 6 ஆவணத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ. 7 ஆவணத்தின் விபரம் தெரியாது என்றால் சரிதான். எனது கணவருக்குதான் தெரியும். வா.சா.ஆ8 ஆவணம் பற்றி தெரியுமா

என்றால் தெரியாது. வா.சா.ஆ. 9 ஆவணம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்திலத்திற்கு யார் விபரம் சொன்னார் என்றால் தெரியாது. பிரதிவாதி வடபுறத்தில் காலி இடம் விட்டு வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

8. பிரதிவாதியின் தாயார் பெயர் செல்லத்தாய் என்றால் சரிதான். குமாரவேல்கவுண்டரின் மனைவி செல்லத்தாய் அவரது மகளான பிரதிவாதிக்கு 01.02.1999ல் உயில் சாசனம் மூலம் சொத்துக்கள் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. பிரதிவாதியின் கணவர் மணிகண்டனுக்கு தான ஆவணம் மூலம் பிரதிவாதி வீடு பாத்தியம் என்றால் தெரியாது. பிரதிவாதி கணவர் மணிகண்டன் பெயரில்தான் வீடு உள்ளது. மேற்படி பிரதிவாதி கணவரை வழக்கில் தரப்பினராக சேர்க்காததாலும் உரிய வாரிசுதாரர்களிடமிருந்து நான் சட்டப்படி கிரையம் பெறவில்லை என்பதாலும் வழக்கு சட்டப்படி நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கியதாக கூறும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**

முடிவடையும் நேரம் : 01.35 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.24 22:45:11 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.